**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 188/2017**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW3<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 01st day of April 2024.

**(Accused is produced)**

# S.C. No. 188/2017

# 01.04.2024

**அ.த.சா. 3 - திரு. கிருஷ்ணன், த/பெ. சின்னச்சாமி**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் சென்னையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எங்கள் பகுதியில் ஆஜர் எதிரி வசிப்பதால் அவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி மீன் வியாபாரம் செய்து வந்தார். சம்பவத்தின்போது நான் ஊரில் இல்லை. சுறா என்பவரை மணிகண்டன் மற்றும் லோகேஷ் ஆகியோர்கள் கொலை செய்து விட்டதாக கேள்விப்பட்டேன். 12.09.2016 அன்று பொத்தூர் மேட்டிலிருந்து நான் காலை 08.30, 09.00 மணியளவில் வந்துக்கொண்டிருந்தபோது போலீசார் சம்பவயிடத்தை பார்த்து படம் வரைந்தார்கள். இரத்தம் தோய்ந்த மண், கல் ஆகியவற்றை அந்த இடத்திலிருந்து கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். **அந்த பார்வை மகசர் அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் 12.09.2016 அன்று என்னை விசாரித்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் 11.09.2016 அன்று மாலை 09.00 மணியளவில் நான் வெளியில் உட்கார்ந்திருந்த போது யாராவது ஓடி வாங்க என்று யாரோ ஓடிவருவதை பார்த்தேன்

என்றும் ஓடிவந்த நபர் எங்கள் ஊரைச்சேர்ந்த பன்னீர்செல்வம் என்றும் சுறாவை வெட்டுகிறார்கள் என்றும் காப்பாற்ற என்னிடம் கூறினார் என்றும் நாங்கள் ஓடிப்போய் பார்த்தபோது சுறா கொட்டகை வீட்டின் வாசலில் உள்ள கட்டிலில் இரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார் என்றும் அப்போது வீட்டின் பின்னால் இருந்து ஒருநபர் இரத்த காயத்துடன் ஓடிவந்தார் என்றும் அவர் சுறாவின் நண்பர் என்றும் ஏற்கனவே இருந்த பகையின் காரணமாக மீன்வெட்டும் கத்தியால் ஆஜர் எதிரி மற்றும் மற்றொரு எதிரி லோகேஷ்வரன் சுறாவை வெட்டினார்கள் என்றும் தடுக்க வந்த சுறாவின் நண்பரையும் வெட்டினார்கள் என்றும் ராஜேந்திரன் மற்றும் அருகில் இருந்தவர்கள் சுறாவின் நண்பரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றும் போலீசார் வந்து சம்பவயிடத்தை என் முன்னிலையில் பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும் சம்பவயிடத்திலிருந்து இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண், இரத்தம் படிந்த ஹாலோ பிளாக் கல் ஆகியவற்றை கைப்பற்றினார்கள் என்றும் அதில் நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த குமார் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி என் ஊரைச்சேர்ந்தவர் என்பதால் எதிரிக்கு பவ்யப்பட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரியை கேட்டதில் எதிரி குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.